# தமிழ்ச்சோலை

மலர் : 11 மார்ச் : 2021 அரும்பு :19

இணைய இதழ்



## கீழடி தமிழரின் தாய்மடி

தமிழாய்வுத்துறை

காவேரி மகளிர் கல்லூரி (தன்னாட்சி)

தேசியத் தர நிர்ணயக் குழுவின் மதிப்பீட்டில் (மூன்றாம் சுற்று) ‘A’ தகுதி பெற்றது

திருச்சிராப்பள்ளி – 18

## ஆசிரியர் குழு

முனைவர் ச.இராமலெட்சுமி

முனைவர் மு.ஜெயலெட்சுமி

முனைவர் மா.ஆசியாதாரா

திருமதி.பொ. அபிராமி

செல்வி. ஜெ.தேவிதா

# முகவுரை

பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம் என்ற பாரதியின் வரிகளை மெய்ப்பிக்கும் வகையில் பெண் கல்வி வழங்கும் பணியினை மேற்கொண்டு வருகிறது காவேரி மகளிர் கல்லூரி. யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி போல் இனிதாவதில்லை என்பதற்கேற்ப தமிழ் மொழியின் இனிமையைத் திக்கெட்டும் சேர்க்கும் ஆற்றலுடன் இயங்கி வருகிறது தமிழாய்வுத்துறை.

கல்லூரிப் பருவம் தங்களைச் சீர்படுத்திக் கொள்ளும் எண்ணற்ற வாய்ப்புகளை மாணவர்களுக்கு உருவாக்கித் தரும் உணர்வான பருவம். கல்வி ஒரு கண் என்றால் கலைகள் மறு கண்ணாக அமைந்து மாணவர்களின் வாழ்விற்கு வலு சேர்க்கிறது.

மாணவர்களுக்குக் கல்வி மட்டுமல்லாது அவர்களிடம் புதைந்து கிடக்கின்ற கற்பனை ஆற்றல்களையும் சிந்திக்கும் திறன்களையும் வளர்க்கும் திறவுகோலாகத் திகழ்கிறது தமிழ்ச் சோலை என்னும் இதழ். ஒவ்வொரு ஆண்டிற்கும் இரு முறை இவ்விதழ் வெளிவருகின்றது. பயிற்சியும், முயற்சியும் இருந்தால் இமயம் தொடலாம் என்ற சிந்தனையுடன் இப்பருவத்திற்குரிய இணைய வழி இதழாக மலர்கிறது தமிழ்ச்சோலை.

**தலைவர்**

**தமிழாய்வுத்துறை .**

# பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| கவிதைகள் | - | 1 |
| சிறுகதை | - | 10 |
| கட்டுரை | - | 16 |
| மருத்துவக் குறிப்புகள் | - | 21 |
| விடுகதைகள் | - | 25 |
| தெரிந்து கொள்வோம் | - | 27 |
| ஓவியங்கள் | - | 39 |

# தாய்



உயிரினும் உயர்ந்தவள்!
என் உணர்வினில் கலந்தவள்!
கடவுளை விட மேலானவள்!
உள்ளம் என்னும்
கோவிலுக்குள் சிலையானவள்!
உன்னத வாழ்வின்
உண்மையாக இருந்தவள்!
நன்மையும் தீமையும்
உணர வைத்தவள்!
நன்னடத்தையை வாழ்வாக்கியவள்!
தியாகத்தின் உருவானவள்!
திருவுருவின் செயலானவள்!
என்னவள் என்றானவள் அவளே தாய்!
கடவுளை உணர
தாயை மதித்து நட!
கடவுள் உன்னைத் தேடி வருவார்!

**வி. கீர்த்தனா**

**இளங்கலை முதலாமாண்டு தமிழிலக்கியம்**



## முயற்சி




முயற்சிகள் தவறலாம்

முயற்சிக்க தவறலாமா!

முயற்சி வெற்றியோடு வரும்

ஆனால்

வெற்றி முயற்சி உள்ளவரிடமே வரும்!

மூச்சு விட்டுக் கொண்டிருப்பவன்


எல்லாம் மனிதனல்ல!

மூச்சிருக்கும் வரை முயற்சி செய்பவனே மனிதன்!

**ச.பவித்ரா**

**இளங்கலை இரண்டாமாண்டு வணிகவியல் இ பிரிவு**

## இறைவா...



இறைவா,
நீ இருக்கின்றாயா இல்லையா? அறியேன்!
ஆனால், நம்பிக்கையின் சின்னமாக மக்களிடையே பிரதிபலிக்கிறாய்!
மகத்தான மனிதர்களைப் படைத்தாய்!
மகத்தற்ற மனிதர்களையும் படைத்தாய்!
புரியாத உன் தத்துவம்
பாசம், நேசம் ஒன்றை வளர்த்து, அதனுடன்
பகை என்ற ஒன்றை விதைத்தாய்!
கலியுகக் கடவுளாய்த் தோன்றி
சமூகத்தின் ஏற்றத்தாழ்வுகளை
எப்போது சீர்செய்வாய் என்ற ஏக்கத்தோடு....
விரைவில் வா....

**தி. ஹரிணி**

**இளநிலை முதலாமாண்டு இயற்பியல்**



## உலகமும் உள்ளமும்

உலகம் - உன் முகத்தின் மறு சாயல்....
உள்ளம் - உலகத்தின் மறு சாயல்...
உலகத்தின் முகத்தில் உன் உள்ளத்தைப் பார்!
உள்ளத்தின் முகத்தில் உலகத்தைப் பார்!
உள்ளத்தின் முகத்தில் உண்மையைப் பார்!
உண்மையின் முகத்தில் நேர்மையைப் பார்!
நேர்மையின் முகத்தில் மதிப்பைப் பார்!
மதிப்பின் முகத்தில் மரியாதையைப் பார்!
மரியாதையின் முகத்தில் மானுடத்தைப் பார்!
மானிடத்தின் முகத்தில் உன்னைப் பார்!
உன் முகத்தில் உலகத்தைப் பார்!
உலகம் இல்லாமல் உள்ளம் இல்லை
உள்ளம் இல்லாமல் உலகம் இல்லை
“மானிடனே….!
உலகமும் உள்ளமும் ஒட்டிப்பிறந்த
இரட்டைக் குழந்தைகள்”



**வே.ல.ஓஜஸ்வனி**
**இளநிலை முதலாமாண்டு ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறையியல்**

## ஏவுகணை நாயகன்



விண்ணில் இருந்து வந்த ஒளி!
மண்ணை அடைந்து மண்ணில்
விண்ணகச் சாதனை புரிந்து
மீண்டும் விண்ணகம் அடைந்து விட்டது!
அடுத்த பிறவியில்
உலகை அழிவிலிருந்து காக்க
காத்துக் கொண்டிருக்கிறது!

**சி.அபிதாம்பிகை**
**இளநிலை முதலாமாண்டு ஊட்டச்சத்து மற்றும் உணவுமுறையியல்**

## கண்ணாடி வளையல்கள்



பெண்ணும் இறைவன்
படைப்பின் மூலம் தானே!
இருப்பினும் பூக்கும் முன்
உதிர்ந்திடும் சருகானது விதியா!
கள்ளிப்பாலால் கருவறை
செல்லும் உயிரினமானாள் பெண்!
எதனால்..
அநாகரிக உடைகளா?
ஆண்ட்ராய்டு தந்திடும்
தவறான தகவல்களா?
வரதட்சணைக்காக அஞ்சிடும் பெற்றோரா?
எது பெண்ணைக்
கண்ணாடி வளையல்களாக
கள்ளிப்பாலுக்குள் கருவறையைக்
காட்டியது?

**லாவண்யா**
**இளநிலை இரண்டாமாண்டு கணிதவியல் அ பிரிவு**




## நண்பர்கள்

அலை பாய்ந்த இதயத்தை
அணைபோட்ட உள்ளங்கள்
இவர்களின் உதயம் தான்
என்றுமே இன்பங்கள்
இதயத்தின் துடிப்பு கூட
இவர்களின் நினைவுகளில்....
இவர்களின் அடிச்சுவடு
என்றுமே அழியாது
முகவரிகள் தெரியாது
முகங்களோ மறையாது
நினைவுகள் நீங்காது
சொன்னாலும் புரியாது
இதயம் அறிந்தது
விரல்கள் மறந்தது
கவிதை முடிந்தது
கண்கள் மறுத்தது

**ம.மலர்சூர்யா**

**இளநிலை முதலாமாண்டு கணினிபயன்பாட்டியல் அ பிரிவு**





## பெண்ணே விழித்தெழு!

பெண்ணே விழித்தெழு
கோட்டைத் தாண்டிய
சீதையை இன்றும்
விமர்சிக்கும் உலகம்
சீதையை நெருப்பில்
நிற்க வைத்த இராமரோ
இன்றும் கடவுள்
பாஞ்சாலிக்கு ஆடைதந்த
கண்ணன் இன்றும் கடவுள்
ஆடை களையச்சொன்ன
கயவர்களை என்ன
செய்தது சமூகம்
காலங்கள் மாறினாலும்
பெண்ணுக்கான இலக்கணங்கள்
இன்றும்...
என்றும்.... தனிப்பட்டவையே.

**வீ.புவனேஸ்வரி**

**முதுகலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**





## மழை

வானத்தின் கருணை

கடவுளின் தாய்மை!

பயிர்களின் தோழன்

உயிர்களின் மகிழ்ச்சி!

பறவைகளின் சங்கீதம்

காற்றின் காதல்!

மலர்களின் மௌனம்

விடியலின் தேடல்!

வேர்களின் ஊடல்

மொத்தத்தில்

மனதின் பாடல்!

மகிழ்வின் தேடல்!

**ஆர்.சாருலதா**

**இளநிலை மூன்றாமாண்டு கணினிபயன்பாட்டியல் அ பிரிவு**




## கல்லூரி

இளமையின் கனவுகளைச்
சுமக்கும் பருவம்!
கனவுகளை இலட்சியமாக்க
போராடும் பருவம்!
நட்புகளைத் தேடும்
ஆரவாரம்!
ஆலமரத்துப் பறவைகளாய்
மாறும் தருணம்!
கூடு விட்டு கூடு
பாய்ந்து
வீடு விட்டு விடுதியில்
வாழ்ந்து
எதிர்கால வினாவிற்கு
விடை தேடும் பருவம்!

**எஸ்.அபிராமி**

**இளநிலை மூன்றாமாண்டு கணினிபயன்பாட்டியல் அ பிரிவு**



## விவசாயி

மழைக்குக் கூட பள்ளியில் ஒதுங்காதவன் - ஆனால்
இந்த மாபெரும் உலகத்துக்கே சோறிடுபவன்
காடு பங்களா என்று சொத்து ஏதும் இல்லை
கருஞ்சேற்று மண்ணே அவனது சொத்தாகும்.
எட்டு வழி சாலைக்காக அவனது சொத்தை
பறிக்க நினைக்கும் அரசே! அவன்
அடுத்த வேளை சோற்றுக்குத் திண்டாடுவது
ஏனோ உனக்குத் தெரியவில்லையே!
இயற்கையையே நம்பி வாழும் அவனுக்கு
இயற்கை கூட சில சமயங்களில் கையை விரித்து விடுகிறது.
உலகத்துக்கே சோறிட்ட விவசாயி
கடனுக்குப் பயந்து கஞ்சிக்கு வழியில்லாமல்
உயிரை விடுகிறானே!
விவசாயக் கூட்டம் என்பது சோற்றுக்கு மாய்ந்த கூட்டம் இல்லை
சோறிட்டே மாய்ந்த கூட்டம்
பெருமை கொள்வோம் தோழர்களே!
உலகத்துக்கே சோறிடும் விவசாயிகளுள்
ஒருவர் தான் என் தாயும் தந்தையும் - என்று
ஆதலால்... விவசாயம் காப்போம்
விவசாயிகளை மதிப்போம்!

**மு.கோடீஸ்வரி**

**இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**



## பசுமை தேவை




மனதில் வந்த ஒளி போல்
விதையில் வந்த தாவரமே
நீ புவியில் தோன்றிய பசுமை மனிதனே!
பிறருக்கு உன்னால் பலபயன்!
என்னால் உனக்கு என்ன பயன்!
மழை தந்தாய் உலகுக்கு
உன்னுயிர் ஈந்தாய் எங்களுக்கு!
மண்ணில் வரமாய் மாறியே
மண்சரிவைத் தடுத்தாய்!
நாங்கள் வாழ உன்
காற்றைத் தந்தாய்!
மறந்தோமே அந்த நிமிடத்தில்
ஆக்சிஜன் இன்றி அலைவோம்
எதிர் காலத்தில்
இனியாவது பசுமையைக் காப்போம்!
எந்நாளும்
தாவரங்கள் வாழ்வதற்கு அல்ல
நாம் உயிர் வாழ்வதற்கு!

**ச.மகாலெட்சுமி**

**இளங்கலை மூன்றாமாண்டு தமிழிலக்கியம்**



**சிறுகதை**



## இலக்கை நோக்கிய பயணம்

தெருவே விழாக் கோலமாகக் காட்சியளித்தது. விழா மண்டபம் முழுவதும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. தெருக்களில் பேனர்களும் ஆங்காங்கே மக்கள் கூட்டமும் கடல் அலை போல நின்றிருந்தனர். பாதுகாப்பிற்குக் காவலர்கள் அணிவகுத்து நின்றனர். தொலைபேசி மணி அடித்தது. நிகில் தொலைபேசி எடுத்து பேசினான்.

“ஆமாம் சார் விழா இன்னும் சற்று நேரத்தில் தொடங்க உள்ளது”, என்றான். விழாவிற்கு வந்திருக்கும் அனைவரையும் உபசரித்தனர் விழாக் குழுவினர். மக்கள் அனைவரும் நிகிலின் பெருமையைப் பறைசாற்றிக்கொண்டு இருந்தனர்.நிகிலின் உறவினர்கள் தத்தம் சொந்தங்கள் என்று சொல்லிக்கொள்வதில் பெருமைப்பட்டுச் சொல்லிக் கொண்டிருந்தனர்.

“சிறுவயதிலிருந்தே திறமைசாலியாக இருப்பான்” என்று முன் பின் தெரியாதவர்களிடம்

சொல்லிப் பெருமையடைந்தனர்.

விழா ஆரம்பித்தது.

நிகழ்ச்சித் தொகுப்பாளர் ஒலி வாங்கி முன் வந்து நிகழ்ச்சியைத் தொடங்கினர். முதலாவதாக அரசு அலுவலர் ஒருவர் வரவேற்புரை நல்கினார். அவரைத் தொடர்ந்து விழாவில் கலந்துகொண்ட முதல்வர் அவர்கள் நிகிலுக்குச் சிறந்த தொழிலதிபர் என்ற பட்டத்தையும் பாராட்டுச் சான்று, ரொக்கப் பரிசு, சால்வை அணிவித்து நிகிலைக் கௌரவப் படுத்தினார். அதன்பின் அவர் பேசத் தொடங்கினார்.

அரங்கமே கரகோஷத்தால் அதிர்ந்தது. நிகில் விழாவிற்கு வந்திருந்த சிறப்பு விருந்தினர்கள் அனைவருக்கும் சால்வை அணிவித்தும் பூங்கொத்து வழங்கியும் தனது அன்பை வெளிப்படுத்தினார்.விழா நாயகன் தொழிலதிபர் இப்பொழுது ஏற்புரை நிகழ்ச்சி. ஒரு சில வார்த்தைகள் பேச அன்புடன் அழைக்கின்றோம் என்று தொகுப்பாளர் அழைக்க,

மைக் முன் வந்து நின்று பேசத் தொடங்கினார். ‘‘அனைவருக்கும் வணக்கம். முதல்வர் அவர்கள் கையால் இந்த விருது பெறுவது எனக்கு மிகுந்த பெருமையை அளிக்கிறது. மேலும், முதல்வர் அவர்கள் பேசுகையில் என்னைப் பெற்றதற்கு என் பெற்றோர்கள் பாக்கியம் செய்திருக்க வேண்டும் என்று கூறினார்கள். அவர்களுக்கு நன்றி.

இதுவரை யாரும் அறிந்திராத உண்மையை இப்போது உங்களுக்குச் சொல்லப் போகிறேன். கடலூர் மாவட்டம் திட்டக்குடி வட்டம் பெண்ணாடத்திற்குப் பக்கத்தில் உள்ளது எனது திருமலை என்ற அழகிய கிராமம். சின்னசாமி கமலா என்ற தம்பதிக்கு மகனாகப் பிறந்தேன். திருமணம் ஆகிய ஐந்து ஆண்டுகள் குழந்தை இல்லாமல் இருந்தனர். கோயில் குளங்கள் சென்று தவமாய் தவமிருந்து பெற்ற பிள்ளை நான். இவர்களுக்கு ஒற்றை மகன். எனது தந்தை பட்டதாரி ஆசிரியருக்குப் படித்துவிட்டு வேலை கிடைக்காத காரணத்தால் தனது குடும்ப வறுமையைப் போக்க பெண்ணாடத்தில் டியூஷன் சென்டர் நடத்தினார். அதன் மூலம் அப்பகுதி மாணவர்கள் பலர் பயன் பெற்றனர். இவருக்கும் ஓரளவிற்குக் குடும்பம் நடத்தும் அளவிற்கு வருமானம் கிடைத்தது.

ஐந்து ஆண்டுகள் கழித்துப் போட்டித் தேர்வு எழுதி அரசுப் பள்ளி ஆசிரியராகப் பணியில் சேர்ந்தார். சேர்ந்த சில மாதங்களிலேயே நோய்வாய்ப்பட்டு உயிர் இழந்து விட்டார். அப்போது எனக்கு வயது மூன்று. தந்தைக்கு என்ன ஆனது என்பது தெரிந்துகொள்ள முடியாத நிலை. எல்லோரும் அழுவார்கள், என் தாயும் அழுதார். எதுவும் புரியவில்லை. ஒரு ஓரமாக அமர்ந்து அழுது கொண்டே பார்த்துக் கொண்டிருந்தேன். இன்னும் எனக்கு ஞாபகம் இருக்கிறது.

அதன் பின் என் தாய் கருணை அடிப்படையில் வேலைக்காக விண்ணப்பித்திருந்தார். அவருக்கு நீண்ட காலமாக அதாவது பத்தாண்டுகள் கழித்தே கருணை அடிப்படையில் வேலை கிடைத்தது. அவர் வேலைக்குச் சேர்ந்த போது எனக்கு வயது 13. நான் அப்போது ஒன்பதாம் வகுப்பு படித்துக் கொண்டிருந்தேன். அவருக்கு வேலை கிடைத்த மூன்றாம் மாதம் நெஞ்சுவலியால் இறந்து விட்டார். அவருடன் இருந்த எனக்கு என்ன நடந்தது என்று ஒன்றும் புரியவில்லை. அதுவரை திரும்பிப் பார்ககாத உறவும் சொந்தம் கொண்டாடினர். நான் பார்த்துக் கொள்கிறேன். நான் படிக்க வைக்கிறேன், என்று போட்டி போட்டனர். ஆனால் எனக்கு ஒன்றும் புரியவில்லை. பிற்காலத்தில்தான் அவர்கள் எதற்காகப் போட்டி போட்டனர் என்று தெரிந்து கொண்டேன்.

ஆனால் என் தந்தை இறந்தவுடன் எனது தாய்க்கு ஆதரவாக மாமாவின் அரவணைப்பிலேயே இருப்பது என்று முடிவு செய்து, அவர்களுடன் சென்றேன். அவர்களின் உதவியுடன் இன்று இந்த நிலைக்கு வந்தேன். இப்போது என்னைப் பார்த்துத் திறமைசாலி, புத்திசாலி, அதிர்ஷ்டக்காரன், பாக்கியம் செய்தவன் என்றெல்லாம் புகழ்ந்த உலகம், என் தந்தை தாயின் இறப்பிற்குப் பிறகு அதிர்ஷ்டமில்லாதவன், இரண்டு உயிரைக் குடித்தவன் என்றெல்லாம் என் காதுபடவே பேசிய உறவுகள், இப்பொழுது சொந்தம் கொண்டாடிக் கொண்டும் பெருமைப்பட்டுக் கொண்டும் இருக்கிறார்கள். நான் இந்த அளவிற்கு வந்ததற்கு அவர்களும் ஒரு முக்கியக் காரணம். அவர்களின் ஏச்சுப் பேச்சால் எனக்கு உயர வேண்டும் என்றும், இவர்களுக்கு முன் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வெறியும் எழுந்தது. என்னுடைய விடாமுயற்சி, கடினமான உழைப்பு இவைகள் தான் என்னை இன்று இந்த மேடையில் ஒரு சிறந்த தொழில் அதிபர் உயரத்திற்குக் கொண்டு வந்துள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்தத் தருணத்தில் என் தாயும் தந்தையும் என் நினைவுகளில் வந்து போகிறார்கள், என்று தனது கைக்குட்டையை எடுத்துக் கண்ணில் வழிந்த கண்ணீரைத் துடைத்துக் கொள்கிறான். “நீண்ட நேரம் எடுத்துக் கொண்டமைக்கு மன்னிப்பும் இந்த விழாவிற்கு வந்து சிறப்பித்த முதல்வர் உள்ளிட்ட அனைவருக்கும் நெஞ்சார்ந்த நன்றியையும் கூறிக் கொண்டு விடை பெறுகிறேன். நன்றி வணக்கம்”, என்று உரையை முடித்து அமர்ந்தார்.

அரங்கமானது நிசப்தமானது. உறவினர்கள் வெக்கினார்கள். விழா நிறைவடைந்தது.

**ச.ம.காவ்யா**

**இளங்கலை மூன்றாமாண்டு தமிழ் இலக்கியம்**



# முதல் அன்பு



அமெரிக்காவில் உள்ள வெள்ளை மாளிகையில் அமெரிக்க அதிபர் அவர்களைச் சந்தித்து கல்லூரியில் செய்த ஆராய்ச்சிக்காகப் பாராட்டுகளை வாங்கிக்கொண்டு அங்கிருந்து வெளிவந்தாள் ஹரிணி. சில மணி நேரங்கள் கழித்து அமெரிக்க விமான நிலையத்தில் சென்னை செல்லும் விமானத்திற்காகக் காத்திருக்கிறாள். அப்பொழுது தன் காதலை நினைத்துப் பார்க்கிறாள். அமெரிக்கா சென்று மூன்று வருடம் ஆகிறது. இந்த மூன்று வருடங்களில் எவ்வளவு மாற்றம், ஒரு முறை கூட சந்தித்ததே இல்லை. ஆனால் நினைக்காத நாள் என்ன நிமிடம் கூட இல்லை. அவள் மட்டும் அமெரிக்காவிலும் அவள் நினைவுகள் இந்தியாவிலும் இருந்தன. விமானத்தில் பயணம் செய்யும்போதுகூட அந்தச் சிந்தனையேதான். மூன்று வருடம் கழித்துச் சந்திக்கப்போகிறாள். என்ன சந்தோஷம். அதுவும் அவள் வருவதைத் தெரியப்படுத்தக் கூட இல்லை. அவள் காதலை அவள் சந்திக்கும்போது ஒரு வித இன்ப அதிர்ச்சியாக இருக்க வேண்டுமாம். மூன்று வருடங்களுக்கு முன்பு ஒருவித பயம் மற்றும் குழப்பத்துடன் அமெரிக்கா சென்றாள். இப்பொழுது கண்ணிமைக்கும் நொடியில் மூன்று வருடம் சென்றது போல் ஒரு உணர்வு. சென்னை விமான நிலையத்தில் ஹரிணியை அழைக்க அவள் தோழி மட்டுமே வந்திருந்தாள். சென்னையில் ஒரு நொடி கூட வீணாகச் செலவு செய்யாமல் தன் காதலைப் பார்க்க ஆசைப்பட்டாள். அவளின் அவசரத்தை உணர்ந்து காரை வரவழைத்து அவளை அனுப்பி வைத்தாள். காரில் செல்லும்போது கூட அவள் காதல் நியாபகம்தான். அதுவும் இன்று அவள் காதலுக்கு மிக முக்கியமான நாள். ஆதலால் இன்னும் கொஞ்சம் பரபரப்பு. இந்தக் காதல் எப்போது வந்தது என்று கூட தெரியாது. அப்படி ஒரு காதல். “நைல் நதிக்கரை நாகரிகம் தோன்றுவதற்கு முன்னால் பாபிலோனின் தொங்கும் தோட்டம் வருவதற்கு முன்னால் சீனப்பெருஞ்சுவர் தன் அஸ்திவாரத்தைத் தோண்டுவதற்கு முன்னால் எகிப்தில் சலவைக் கற்கள் பழக்கத்திற்கு வரும் முன்னால் தோன்றிய காதல் இது”. அழ அழ பள்ளிக்குச் செல்லும்போது

சாக்லேட் வாங்கிக் கொடுத்தது, கொஞ்சம் வளர்ந்து முதல் முதலில் மிதிவண்டியில் பள்ளிக்குச் செல்லும்போது விடாமல் பின் தொடர்ந்து வந்து அவள் பள்ளி நுழைவாயில் செல்லும்வரை அவளையே பார்த்துக்கொண்டிருப்பது, சாலையைக் கடக்க முடியாமல் தவிக்கும்போது வந்து உதவுவது எனச் சின்னச் சின்ன உதவி முதல் பெரிய உதவி வரை அனைத்தையும் நினைத்துப் பார்க்கிறாள். கல்லூரிப் படிப்பிற்காக விடுதி செல்லும்போது கூட அவளுக்குத் தேவையான பொருட்கள் அனைத்தையும் அவள் கேட்பதற்கு முன் வாங்கிக் கொடுத்து அவளை மகிழ்ச்சியில் தள்ளிய நினைவுகள். விடுதி பழக்கம் இல்லாதது என்பதால் வாரம் வாரம் சென்று சந்திப்பது, அவளின் கஷ்டமான நேரங்களில் உணர்ந்து அவளைச் சமாதானம் செய்வது, எது நடந்தாலும் அதை எதிர்கொள்வது எப்படி என்று தைரியம் அளிப்பது, மேற்படிப்பிற்காக அமெரிக்கா செல்லும் வாய்ப்பு வந்தபோது ஹரிணியை விட அதிக சந்தோஷம் அடைந்தது, உறவினர் அனைவரும் ஹரிணி அமெரிக்கா செல்வதைத் தடுக்கும்போது ஹரிணிக்கு ஆதரவாக நின்றது. ஹரிணிக்குச் சிறு வயதில் இருந்தே இருந்த கனவு அமெரிக்கா சென்று படிப்பதுதான். உன் கனவு நிறைவேற உறவினர் என்ன, இந்த உலகமே எதிர்த்தாலும் போராடுவேன் என்று சொல்லும்போது ஹரிணி கண்ணிலிருந்து ஆனந்தக் கண்ணீர் வந்தது. இந்த மூன்று வருடத்தில் வீடியோ கால் மட்டும் தான் ஆறுதலாக இருந்தது. கல்லூரி படிப்பு முடிவில் செய்ய வேண்டிய projectஇல் ஹரிணி சிறப்பாகச் செய்து அமெரிக்கப் பிரதமரைச் சந்தித்துப் பாராட்டு பெற்றபோதும் தன் காதல் அருகில் இல்லை என்ற வருத்தமும் இன்னும் இரண்டு நாட்களில் தன் காதலைச் சந்திக்கப் போகிற மகிழ்ச்சியும் ஹரிணிக்கு இருந்தது. நினைவு தெரிந்த நாளிலிருந்து இப்போது நடப்பது வரை நினைத்துக்கொண்டே அவள் சேர வேண்டிய இடம் வந்து சேர்ந்தாள். வீட்டின் கதவு திறந்து மெல்லமாக வீட்டினுள் சென்றாள். Happy wedding anniversary...........

அனைவரும் ஒரு நிமிடம் அதிர்ச்சியில் உள்ளனர். என்னைப் பெற்றெடுத்த என் தாய் தந்தையருக்கு இனிய திருமண நாள் வாழ்த்துக்கள் என ஹரிணி சொல்லவே அனைவரும் அதிர்ச்சியில் இருந்து வெளிவந்து மகிழ்ந்தனர். ஆமாம் இன்று ஹரிணி அம்மா அப்பாவிற்கு திருமண நாள். இதுவரை ஹரிணி நினைத்தது அவள் பெற்றோரைப் பற்றித்தான்.

“நம் முகம் பார்க்கும் முன்பே

நம் குரல் கேட்கும் முன்பே


நம் வாய்மொழி அறிவதற்கு முன்பே

நம் குணம் தெரியும் முன்பே

நம்மை நேசித்தவர்கள் நம் பெற்றோர்கள்”.

இந்த உலகத்தில் அம்மா அப்பாவை விட அதிகமாக நம்மை வேறு யாரும் நேசிக்க முடியாது.

So love your parents.



**இப்படிக்கு,**

**ம. வளர்மதி,**

**இளங்கலை முதலாம் ஆண்டு சமூகப்பணித்துறை.**



## கட்டுரை



# முயற்சி திருவினையாக்கும்

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை

முயற்சியும் முன்னேற்றமும்

முயற்சியைச் செய்தவர்கள்

செய்தொழிலின் சிறப்பு

முடிவுரை

**முன்னுரை**

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார், முயன்றால் முடியாதது இல்லை, முயற்சித் திருவினையாக்கும், முயலாமை இன்மை புகுத்தி விடும் என்ற தொடர்கள் முயற்சியின் பயன்களை எடுத்துரைக்கின்றன. வரலாறுகளிலும் பழங்கதைகளிலும் முயற்சியினால் தங்கள் எண்ணங்களை ஈடேற்றிக் கொண்டவர்களைக் காண்கிறோம்.

**முயற்சியும் முன்னேற்றமும்**

பழங்காலத்தில் வாழ்ந்த இராஜஇராஜச் சோழன் தன்னுடைய சுயமுயற்சியைக் கொண்டு பன்னிரண்டு ஆண்டுகளில் தஞ்சாவூர் பிரகதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். பின்பு தாராசுரம் ஐராவதீஸ்வரர் கோயிலைக் கட்டினார். புத்தர் தவமியற்றும்போது எத்தனையோ இன்னல்களைக் கடந்தன்றோ இன்று ஆசியாவின் ஜோதியாக ஒளிவிளக்காய்ப் போற்றப்படுகின்றார். நான்கு வயதிலிருந்து விடா முயற்சி செய்து இருபத்தைந்து வயதில் உலகளவில் டென்னிஸ் போட்டியில் இரண்டாமிடம் பெற்றார் சிமோனா ஹலேப்.

பிறந்த ஆண்டைக் கூட கணக்கிட முடியவில்லை. ஆனால் புவி முழுவதும் நிறைந்திருக்கிறது, அவருடைய கருத்துக்கள். அவர்தான் திருவள்ளுவர். பனை ஓலைகளில் இருந்த நூல்களைக் காப்பாற்றி பதிப்பித்து நூலாக வெளியிட்டவர் தமிழ்த் தாத்தா உ.வே.சா. விடாமுயற்சியின் காரணமாக இந்திய ஏவுகணை மனிதனாகத் திகழ்ந்தவர் டாக்டர். ஏ.பி.ஜே.அப்துல் கலாம்.

**முயற்சியைச் செய்தவர்கள்**

கடிகாரத்தின் நோக்கம் எது?

அது யாருக்காகவும் நிற்காது. அதன் முள் ஓடிக்கொண்டேதான் இருக்கும். சூரியனின் வேலை எது? அது ஒளி கொடுத்துக்கொண்டேதான் இருக்கும். சிலந்தி கற்பித்த பாடத்தால் இராபர்ட் புரூஸ் என்னும் மன்னன் இறுதியாக வெற்றி பெற்ற வரலாற்றை எல்லோரும் அறிந்து இருக்கின்றோம். கீழே வளரும் வேரின் முயற்சியே மேலே வளரும் ஆலமரத்தின் தோற்றம் ஆகும்.

**முயற்சியால் இன்னல்களை வென்றவர்கள்**

முயற்சியால் அறிஞர்கள் நிறைவேற்றியவை பற்பல. முயற்சி இல்லையென்றால் ஆயிரத்திற்கும் மேற்பட்ட கண்டுபிடிப்புகளைத் தாமஸ் ஆல்வா எடிசன் கண்டு பிடித்திருக்க முடியாது. உலக உத்தமர் காந்தியடிகள், கப்பல் ஓட்டிய தமிழர் வ.உ.சிதம்பரனார், அரிய பெரிய அறிவியல் நன்மைகள் பலவற்றை நாட்டிற்கு வழங்கிய மனிதர் கோவை ஜி.டி.நாயுடு, வீதி விளக்கில் படித்து நீதிபதியான முத்துசாமியார், உலகம் போற்றும் வீரன் நெப்போலியன், மராட்டிய மன்னன் சத்ரபதி சிவாஜி ஆகிய இவர்கள் உடல்கள் அழிந்தும் வாழ்ந்துகொண்டே இருக்கிறார்கள். அதற்குக் காரணம் அவர்கள் மேற்கொண்ட முயற்சி ஆகும். இவர்களின் முயற்சிக்கிடையே ஏற்பட்ட இன்னல்கள் கட்டுக்கடங்காதவையாகும். அவற்றை வென்று வெற்றி பெறுவதற்கு அவர்களின் முயற்சியே காரணமாகும்.

**செய்தொழிலின் சிறப்பு**

உள்ளத்தில் முயற்சி உறுதியாக இருக்கும் அளவிற்கு உணர்வும் இருக்கும் என்று வள்ளுவர் கூறியுள்ளார். உழவரின் முயற்சியால் பயிரும், நெசவாளர்களின் முயற்சியால் மானம் காப்பாற்றப்படலும், சிற்பியின் முயற்சியால் சிலையும், பாவலரின் முயற்சியால் காவியமும், ஓவியரின் முயற்சியால் உருவமும் உருவாகி உயர்கின்றன. மக்கள் பிறக்கும்போது குழந்தைகளாகப் பிறக்கின்றனர். ஆனால் இறக்கும்போதோ சிலர் உத்தமராக, அறிஞராக, மேதைகளாக மறைகின்றனர். அவர் செய்தொழிலின் சிறப்பு முயற்சியே அவர்களை உயர்த்தியது.

**முடிவுரை**

முயற்சியே எச்செயலுக்கும் அடிப்படை. முயற்சியுடன் எது செய்யினும் வெற்றி உறுதி. மூடநம்பிக்கையை முறியடித்த சாதனையாளர் தந்தை பெரியார், இமயத்தின் எவரெஸ்ட் சிகரத்தை வெற்றிகொண்ட டென்சிங், ஹில்லாரின் போன்றோரின் செயல்கள் முயற்சியை உரக்க எடுத்துரைக்கின்றன.

இப்படிப்பட்ட முயன்றவர்களின் பட்டியலில் இடம்பெற நாமும் முயன்று முன்னேறுவோம்.

**மகேஸ்வரி**

**இளங்கலை இரண்டாம் ஆண்டு**

**கணிதவியல் ஆ பிரிவு**

## கட்டுரை



# புதுமைப்பெண்

**குறிப்புச் சட்டகம்**

முன்னுரை

பாரதி கண்ட புதுமைப் பெண்

உடன்கட்டை ஏறுதல்

பெண்கல்வி

பெண்அடிமை

முடிவுரை

**முன்னுரை**

பாரதி கண்ட கனவில் இதுவும் ஒன்று. பெண்கள் அனைவரும் அடுப்பங்கரையில் இருக்கக் கூடாது. அவர்கள் முன்னேற்றம் அடைய வேண்டும். எல்லோரும் வீட்டிலே முடங்கி இருக்கக் கூடாது என்பதே அவரின் நோக்கமாகும். பெண்களும் கல்வியைப் பெற வேண்டும். அவர்கள் ஆண்களுக்கும் சளைத்தவர்கள் இல்லை என்றும் கூறினார்.

**பாரதி கண்ட புதுமைப் பெண்**

பெண்கள் முன்னேற்றத்திற்காக பாரதியார் மிகவும் பாடுபட்டார்.அதிலும் பெண்உரிமை, சொத்துரிமை, பெண்கல்வி, அடிமைப்படுத்துதல்,வீட்டிலே முடங்கிக்கிடத்தல், வீட்டிற்கு வெளியே வராமல் அடுப்பங்கரையே “விதி” என்று இருத்தல், உடன்கட்டை ஏறுதல் போன்றவை இதெல்லாம் பெண்களை முன்னேற்றம் அடைய விடாமல் செய்கின்றன. பெண்களை ஆண்கள் அடிமைப்படுத்தக் கூடாது என்பதும் அவருடைய நோக்கமாகும்.

**உடன்கட்டை ஏறுதல்**

இவ்வுலகில் பெண்களை அடிமைப்படுத்துதல் மிகவும் எளிமையானதாக இருக்கின்றது. பெண்கள் தங்களின் கணவன் இறந்துவிட்டால் அந்த நெருப்பிலேயே அவர்கள் விழுந்து இறந்துவிட வேண்டும். அல்லது வீட்டை விட்டு வெளியில் செல்லாமல் மொட்டை அடித்துக்கொண்டு வெள்ளை உடை அணிய வேண்டும். பெண்களுக்கு இழைக்கப்படும் இந்த அநியாயத்திற்கு எதிராகப் போராடி வெற்றி கண்டவர் பாரதியார்.

**பெண்கல்வி**

பெண்கள் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பது பாரதி போன்ற பெண் விடுதலைப் போராட்ட வீரர்களின் கனவாகும். பெண் கல்வியினால் நாடு முன்னேறும் என்ற கொள்கையினை உலகிற்கு உணர்த்துகின்றார்.

**பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்!**

பெண்களை அடிமை முறையில் நடத்தாமல் அவர்களுக்குக் கல்வி கொடுக்க வேண்டும். ஆண், பெண் இருவரும் சமம் என்று அனைவர் மனதிலும் பதிய வைக்க வேண்டும்.

**பெண் அடிமை**

பெண்கள் அடிமையிலிருந்து முழுமையாக வெளிவரவேண்டும். ஆணுக்கு இங்கே பெண் இளைப்பில்லை என்றான் பாரதி. தலைகுனிந்து நடந்தது போதும், தலை நிமிர்ந்து உலகைப் பார்த்து அடிமைத் தளையைக் கட்டவிழ்த்த பெண் என்று கூறி உன் அறிவுத் திறமையை உலகிற்கு உணர்த்து என்று பாரதி பெண்களாகிய நம்மைப் பார்த்து உணர வைக்கின்றார்.

**முடிவுரை**

பாரதி கண்ட கனவு இன்று உண்மையாய் உள்ளது. பெண்கள் கல்வி கற்பதில் முன்னேறியுள்ளனர். அறிவை வளர்த்து திறமையைப் பெருக்கி, சாதிக்கும் ஆற்றலைப் பெண்கள் வளர்த்துக்கொள்ள வேண்டும். ஆணுக்கு பெண் நிகர் எனும் பாரதியின் கூற்றை மெய்ப்பிக்க வேண்டும்.

**எஸ்.மதுமிதா**

**இளநிலை இரண்டாமாண்டு**

**கணினிஅறிவியல் ஆ பிரிவு**



# மருத்துவக் குறிப்புகள்



- மஞ்சளுடன் வேப்பெண்ணெய் கலந்து தடவ பித்த வெடிப்பு குணமாகும்.
- முருங்கைக் கீரை சாப்பிட கண்நோய் குணமாகும்.
- தும்பை இலைச்சாறு பூச பூரான்கடி விஷம் முறியும்.
- வெந்தயம் கல்லீரல் வீக்கம், இருமல் வயிற்று வலிக்குச் சிறந்தது.
- பனங்கிழங்கு பித்தத்தைப் போக்கி உடல் நலத்தைப் பெருக்கும்.
- சேப்பங்கிழங்கு சாப்பிட்டுவந்தால் நரம்புகள் பலம் பெறும்.
- சங்கு இலையை அரைத்துச் சாப்பிட்டு வர ஆஸ்துமா குணமாகும்.
- குப்பை மேனி சாறு தடவ தலைவலி குணமாகும்.
- தூதுவளை இலையை ரசம் வைத்துச் சாப்பிட ஜலதோஷம் நிற்கும்.
- ஆட்டுப்பால் தினமும் சாப்பிட்டு வர வலிப்பு நோய் குணமாகும்.
- மீன் சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் குணமாகும்.
- மாம்பழம் சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் சீராகும்.
- அன்னாசிப்பழம் சாப்பிட்டு வந்தால் கண்நோய் குணமாகும்.
- பப்பாளிப்பழம் மூலவியாதிக்காரர்களுக்கு நல்ல மருந்தாகும்.
- கோவைப்பழம் சாப்பிட பல்வலி குணமாகும்.
- திராட்சை சாப்பிட்டு வந்தால் ஈரல் சம்பந்தமான நோய் குணமாகும்.
- தினசரி பேரீக்காய் சாப்பிட இதய படபடப்பு நீங்கும்.
- மாதுளம்பழம் சாப்பிட குடல் புழுக்கள் அழியும்.

**த.லோகேஸ்வரி**

**இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**



## உணவு மருத்துவக்குறிப்பு



1. செவ்வாழைப் பழத்தைத் தேனில் ½ மணிநேரம் ஊற வைத்துச் சாப்பிட்டு வர தொற்று நோய் அணுகாது.
2. வாழைப்பூ பொரியல் செய்து சாப்பிடுவதனால் அஜீரணம், நீரிழிவு நோய் குணமாகும்.
3. தினசரி கொய்யாப்பழம் சாப்பிட்டு வந்தால் இரத்தச் சோகையில் இருந்து விடுபடலாம்.
4. தினசரி 2 பேரீச்சைபழம் மற்றும் பால் சாப்பிட குளுக்கோஸ் நேரடியாக உடலுக்குள் சேர்கிறது.
5. முற்றிய வெண்டைக்காயை சூப் செய்து குடித்தால் இருமல் உடனே நிற்கும்.
6. தூதுவளை கீரையை அடிக்கடி சாப்பிட்டால் தொண்டை வலி, தொண்டை எரிச்சல் குணமாகும்.
7. ஓமம், பனங்கற்கண்டு, மிளகு இவற்றைப் பாலில் காய்ச்சிக் குடிக்க சளி குறையும்.
8. முள்ளங்கிக் கீரையை அடிக்கடி சாப்பிட்டு வந்தால் கண் எரிச்சல் குறையும்.
9. அகத்திக் கீரையை தினமும் மதிய உணவுடன் சாப்பிட்டு வர இரத்தக் கொதிப்பு குறையும்.
10. உணவில் சுண்டைக்காய் சேர்த்து வந்தால் வயிற்றுப் புழுக்களைக் கொல்லும்.

**ம. ரசிகா**
**இளநிலை இரண்டாம் ஆண்டு**
**உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை**



## வைட்டமின்களின் வேதியியல் பெயர்கள்



1. வைட்டமின் A - ரெட்டினால்
2. வைட்டமின் $B_1$ - தியாமின்
3. வைட்டமின் $B_2$ - ரிபோபிளேவின்
4. வைட்டமின் $B_3$ - நியாஸின்
5. வைட்டமின் $B_5$ - பேன்டோதெனிக் அமிலம்
6. வைட்டமின் $B_6$ - பைரிடாக்ஸின்
7. வைட்டமின் $B_{12}$ - சையனோகோபாலமைன்
8. வைட்டமின் D - கால்சிபெரால்
9. வைட்டமின் E - டோகோபெரால்
10. வைட்டமின் K - குயினோன்

**ப.கிருத்திகா**

**இளநிலை இரண்டாம் ஆண்டு உணவு**

**மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை**



## காய்கறிகளும் நோய் தடுப்புகளும்



1. கத்தரிக்காய் - கேன்சர் வராமல் தடுக்க உதவுகிறது.
2. முருங்கைக்காய் - இரத்தத்தைச் சுத்திகரிக்கும்.
3. பீட்ரூட் - இரத்தக் கொதிப்பைக் கட்டுபடுத்துகிறது.
4. காலி.:.பிளவர் - ஞாபக சக்தியை அதிகரிக்கிறது.
5. வாழைப் பூ - சர்க்கரை நோயைக் கட்டுபடுத்துகிறது.
6. பாகற்காய் - நீரிழிவு நோயைக் குணப்படுத்துகிறது.
7. பீர்க்கங்காய் - கண்பார்வை குறைபாட்டைச் சரி செய்கிறது.
8. துளசி - புற்று நோயைத் தடுக்கிறது.
9. கேரட் - கண் பார்வை அதிகரிக்கும்.
10. கொய்யா - சர்க்கரை நோயைக் கட்டுபடுத்துகிறது
11. சௌ சௌ - இருதய பிரச்சனை வராமல் தடுக்கும்.
12. கொத்தவரங்காய் - சர்க்கரை நோயைக் குணப்படுத்துகிறது.
13. இஞ்சி - செரிமானத்திற்கு உதவுகிறது.
14. உருளைக் கிழங்கு - நோய் எதிர்ப்புச் சக்தியை அதிகரிக்கும்.
15. வாழைக்காய்/வாழைத்தண்டு - சிறுநீரகக் கல் பாதிப்பிலிருந்து பாதுகாக்கும்.

**ச.சக்திப்பிரியா**

**இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**



## விடுகதை




1. எத்தனை முறை திறந்து மூடினாலும் ஓசை வராத கதவு. அது என்ன?

   **விடை: கண் இமை**

2. கருப்பு காடு நடுவுல வெள்ளை ரோடு. அது என்ன?

   **விடை: தலைமுடி**

3. உச்சியிலே ஒரு இனிப்புக் கோட்டை. அது என்ன?

   **விடை: தேன்கூடு**

4. சங்கீதம் பாடுபவனுக்குச் சாப்பாடு இரத்தம். அது என்ன?

   **விடை: கொசு**

5. வெளியில் பனிக்கட்டி உள்ளே மஞ்சள் மேகம். அது என்ன?

   **விடை: முட்டை**

6. பையைத் திறந்தால் பவள முத்துக்கள். அது என்ன?

   **விடை: மாதுளை**

7. செய்தி வரும் பின்னே மணியோசை வரும் முன்னே. அது என்ன?

   **விடை: தொலைபேசி**

8. பச்சை வீட்டுக்குள் வெள்ளைக் கூடு, இனிப்பு நீருடன். அது என்ன?

   **விடை: தேங்காய்**

**ஞா.ஸ்ருதிகா**
**இளநிலை இரண்டாமாண்டு**
**ஆங்கிலத்துறை பிரிவு 'ஆ'**




# விடுகதை

1. ஈட்டிகள் பாதுகாப்பில் இளவரசி, தலையில் அமர தப்பி வருபவள். யார்?
   **விடை - ரோஜா**

2. ஓங்கி வளர்ந்தவள் ஒரு பிள்ளைதான் பெற்றெடுப்பாள். யார்?
   **விடை – வாழை**

3. அவனிடம் ஆயிரம் முடிச்சுகளும் உண்டு, ஆயிரம் ஓட்டைகளும் உண்டு. யார்?
   **விடை -கயிற்றுக்கட்டில்**

4. எங்க அப்பா ஊர் சுத்தி, எங்க அம்மா பிள்ளைதாச்சி. யார்?
   **விடை – பூசணிக்காய்**

5. அனலில் பிறந்தவன், ஆகாயத்தில் பறப்பான். யார்?
   **விடை – புகை**

6. கையில் அடங்குவான், கதை நூறு சொல்வான். அவன் யார்?
   **விடை – புத்தகம்**

7. பச்சை, வெள்ளை, கருப்பு பக்குவமானால் சிவப்பு?
   **விடை – வெற்றிலை, சுண்ணாம்பு, பாக்கு**

8. தலையில் மோதி மோதிப் பல்லை உடைத்தான்?
   **விடை – சீப்பு**

9. பார்க்கும் போது கறுப்பு, பாடும் போது இனிப்பு?
   **விடை – குயில்**

10. இவன் அழுதால் தான் உலகம் சிரிக்கும்?
    **விடை – வானம்**

**இரா.ருக்மணி**

**முதுகலை இரண்டாமாண்டு ஆங்கிலம்**



# தெரிந்து கொள்வோம்

## இராணி லட்சுமிபாய்

பிறப்பு - 19 நவம்பர்1828

இடம் - வாரணாசி, இந்தியா

இறப்பு - 4 ஜீன் 1858

நாட்டு உரிமை - இந்தியா

- இந்தியாவின் வடக்கு பகுதியில் அமைந்துள்ள மாநிலம் ஜான்சி ஆகும். அம்மாநிலத்தின் ராணியாக இருந்தவர் இராணி லட்சுமிபாய்.
- 1857இல் தொடங்கிய இந்தியாவின் சுதந்திரத்திற்கான முதல் போரில் மிக முக்கியமான நபர்களில் ஒருவர் வீரம் மற்றும் தைரியத்தின் மறுவடிவான இராணி லட்சுமிபாய்.
- பள்ளிப்பாடம் படிக்கும் வயதில் இவர் குதிரையேற்றம், துப்பாக்கி சுடுதல் (ம) கத்திச் சண்டை போன்ற தற்காப்புக் கலைகளைப் பயிற்சி செய்தார்.
- 1942இல் ஜான்சியின் தலைவரான ராஜாகங்காதர் ராவ் நிவால்கர் என்பவரைத் திருமணம் செய்தார்.
- 1851இல் இருவருக்கும் ஒரு மகன் பிறந்தான். 1853இல் ராஜாகங்காதர் உடல் சரியில்லாமல் மரணமடைந்தார்.
- 1857இல் செப்டம்பரிலிருந்து அக்டோபர் வரை இராணி லட்சுமிபாய் அவர்கள் அவரது அண்டை நாடுகளான ஒரிசா வாடியாவின் மீது படையெடுத்து வெற்றி கண்டார்.
- ஆங்கிலேயப் படையை எதிர்த்துக் கோட்டாசி சேராய் என்ற இடத்தில் போரிட்டார்.
- ஆங்கிலேயர்களின் நவீன போர்க்கருவிகளால் 18 ஜீன் 1858இல் மரணமடைந்தார்.
- இராணி லட்சுமிபாய் அவர்களின் வீரமும் மகத்தான முயற்சியும் அவரை "இந்திய தேச இயக்கத்தின் உருவம்" எனக் குறிப்பிடவைத்தது.

**கே.துர்கா**

**இளநிலை இரண்டாமாண்டு**

**கணினி அறிவியல் அ பிரிவு**



## பொது அறிவு

1. இந்தியாவின் தேசிய வருமானத்தில் முக்கிய பங்கு வகிப்பது எது?
   விடை - வேளாண்மை
2. அதிக மக்கள் அடர்த்தியைக் கொண்ட கண்டம் எது?
   விடை - ஐரோப்பா
3. உலக அளவில் அதிகமாகப் பேசப்படும் முதல் மொழி எது?
   விடை - மாண்டரின்
4. மனிதன் முதன் முதலில் பயன்படுத்திய தினை வகை எது?
   விடை – கோதுமை
5. உலகிலேயே மிகப் பெரிய கடற்கரை எது?
   விடை – ரசியக் கடற்கரை
6. ராபிஸ் நோய் உண்டாவதற்குக் காரணம் எது?
   விடை - நாய்க்கடி
7. உலகப் புகழ் பெற்ற சாய்ந்த கோபுரம் எங்கு உள்ளது?
   விடை - இத்தாலி
8. சுங்க வம்சத்தை நிறுவியவர் யார்?
   விடை - புஷ்யமித்திரர்
9. மிகப்பெரிய தரைக்கடல் எது?
   விடை - மத்திய தரைக்கடல்
10. பாக்சைட்டில் கிடைப்பது?
    விடை - அலுமினியம்

**ர.ஸ்வர்ண மால்யா**

**முதலாமாண்டு முதுகலை ஆங்கிலம்**



## 2021ஆம் ஆண்டிற்கான பத்மஸ்ரீ விருதுகள்

1. எஸ்.பி. பாலசுப்ரமணியன் (கலை) – பத்மவிபூஷன்
2. செல்வி. பி. அனிதா (விளையாட்டு) - பத்மஸ்ரீ
3. சுப்பு ஆறுமுகம் (கலை) - பத்மஸ்ரீ
4. சாலமன் பாப்பையா (இலக்கியம், கல்வி, பத்திரிக்கை) - பத்மஸ்ரீ
5. பாப்பம்மாள் (விவசாயம்) - பத்மஸ்ரீ
6. கே.சி.சிவசங்கரன் (கலை) - பத்மஸ்ரீ
7. மராச்சி சுப்புராமன் (சமூகப் பணி) - பத்மஸ்ரீ
8. பம்பாய் ஜெயஸ்ரீ (கலை) - பத்மஸ்ரீ
9. பி.சுப்ரமணியன் (வர்த்தகம், தொழில்) - பத்மஸ்ரீ
10. திருவேங்கடம் வீரராகவன் (மருத்துவம்) - பத்மஸ்ரீ

**ம. தனஸ்ரீ**

**முதுநிலை முதலாமாண்டு கணிதவியல்**

## மாவட்டங்களும் சிறப்புப் பெயர்களும்

| | | |
|---|---|---|
| 1. | இராமநாதபுரம் | : புனித பூமி |
| 2. | ஈரோடு | : மஞ்சள் நகரம் |
| 3. | கரூர் | : நெசவாளர்களின் வீடு |
| 4. | கன்னியாகுமரி | : இந்தியாவின் தென்நிலை எல்லை |
| 5. | காஞ்சிபுரம் | : ஆலய நகரம், ஏரி மாவட்டம் |
| 6. | கோயம்புத்தூர் | : தென்னிந்தியாவின் மான்செஸ்டர் |
| 7 | சிவகங்கை | : சரித்திரம் உறையும் பூமி |

8. சென்னை : தென்னிந்தியாவின் கலாச்சார நுழைவாயில்
9. சேலம் : மாம்பழ நகரம்
10. தஞ்சாவூர் : தமிழக அரசின் கிண்ணம்
11. தருமபுரி : தோட்டப்பயிர் பூமி
12. திண்டுக்கல் : பூட்டு நகரம்
13. திருச்சி : மலைக்கோட்டை நகரம்
14. திருநெல்வேலி : தென்னிந்தியாவின் ஆக்ஸ்போர்டு
15. திருப்பூர் : தமிழ்நாட்டின் பின்னலாடைத் தலைநகரம்
16. தூத்துக்குடி : முத்துநகரம், துறைமுக நகரம், தமிழ்நாட்டின் நுழைவாயில்
17. தேனி : இயற்கை விரும்பிகளின் பூமி
18. நாகப்பட்டினம் : சமய நல்லிணக்கத்தின் பூமி
19. நாமக்கல் : தமிழ்நாட்டின் முட்டை நகரம்
20. நீலகிரி : மலைகளின் இராணி
21. மதுரை : கோவில் நகரம், உறங்கா நகரம்
22. விருதுநகர் : வியாபார நகரம்
23. வேலூர் : கோட்டைகளின் நகரம்

**நீ.நவீனா**
**இளங்கலை இரண்டாம் ஆண்டு**
**தமிழிலக்கியம்**

## பொது அறிவு



1. மனிதன் ஒரு அடி எடுத்துவைக்க எத்தனை தசைகள் தேவைப்படுகின்றன?
   விடை- 200 தசைகள்
2. நாம் சுவாசிக்கும் ஆக்ஸிஜனில் எத்தனை சதவீதம் மூளைக்குச் செல்கிறது?
   விடை - 20 சதவீதம்
3. நமது உடல் எடை எத்தனை சதவீதம் எலும்புகளால் ஆனது?
   விடை - 14 சதவீதம்
4. நமது இதயம் ஒரு நாளைக்கு எத்தனை முறை துடிக்கிறது?
   விடை - 1,03,689 முறை
5. மனித நாக்கில் உள்ள சுவை அறியும் செல்களின் மொத்த எண்ணிக்கை என்ன?
   விடை - 3000
6. மனித மூளையில் எத்தனை கிராம் தாமிரம் உள்ளது?
   விடை- 6 கிராம்
7. மனித முகத்தில் எத்தனை எலும்புகள் உள்ளன?
   விடை - 14 எலும்புகள்
8. நுரையீரல் ஒருநாளைக்கு எத்தனை முறை சுவாசத்தை உள்ளியிழுத்து வெளியே செலுத்தும்?
   விடை - 23,040 முறைகள்
9. ஒரு மனிதனின் உடலில் உள்ள நரம்புகளின் மொத்த நீளம் என்ன?

   விடை - சுமார் 72 மீட்டராகும்.
10. நமது இரத்தம் ஒரு நாளில் எத்தனை கிலோமீட்டர் பயணம் செய்கிறது?

    விடை - 30 கோடி கிலோமீட்டர்கள்
11. ஒவ்வொரு சிறுநீரகமும் எத்தனை வடிகட்டிகள் கொண்டுள்ளது?

    விடை - 1 மில்லியன் வடிகட்டிகள்

## விலங்குகள் பறவைகளின் ஆங்கிலப் பெயர்கள்

1. Mule - கோவேறு கழுதை
2. Antelope - மறிமான்
3. Wood pecker - மரங்கொத்தி
4. Vulture - பெருங்கழுகு
5. Rooster - சேவல்
6. Hedgehog - முள்ளெலி
7. Falcon - ராஜாளி பறவை
8. Gull - கடல் புறா
9. Hyena - முள்ளம் பன்றி
10. Raven - அண்டங்காக்கை

**நீ.நவீனா**
**இளங்கலை இரண்டாம் ஆண்டு**
**தமிழிலக்கியம்**

## அறிந்ததும் அறியாததும்


1. கல்லீரல் பற்றிய படிப்பு - ஹெப்பட்டாலஜி
2. வைரஸ் பற்றிய படிப்பு - வைராலஜி
3. புற்றுநோய் பற்றிய படிப்பு - ஆன்காலஜி(புற்றுநோயியல்)
4. சிறுநீரகம் பற்றிய படிப்பு - நெப்ராலஜி
5. பழவகைகள் பற்றிய படிப்பு - போமோலஜி
6. பறவைகள் பற்றிய படிப்பு - ஆர்னித்தாலஜி(பறவையியல்)
7. முடி பற்றிய படிப்பு - ட்ரைகாலஜி
8. கண் பற்றிய படிப்பு - ஆப்தமாலஜி
9. யூனிவெர்ஸ் பற்றிய படிப்பு - காஸ்மோலஜி
10. நிலஅதிர்வு பற்றிய படிப்பு - செய்ஸ்மோலஜி

**ப.கிருத்திகா**
**இளநிலை இரண்டாமாண்டு**
**உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை**

# புதிர்கள்




1. கட்டத்தில் உள்ள விடுபட்ட எண்ணைக் காண்க?




**விடை: 28**

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 5x4 | = | 20 | – 3 | = | 17 |
| 7x2 | = | 14 | - 1 | = | 13 |
| 5 x3 | = | 15 | - 7 | = | 8 |
| 6 x5 | = | 30 | - 2 | = | 28 |

2. முக்கோணத்திலுள்ள விடுபட்ட எண்களைக் காண்க.




a b c

a) $(5)^2$ - (1+2) = 22

b) $(6)^2$ – (4+2) = 30

**c)** $(3)^2$ - (1+2) = 6

**விடை: 06**



3. கொடுக்கப்பட்ட கட்டங்களை மேலிருந்து கீழும் வலப்புறம் இருந்து இடப்புறமும் கூட்டினால் கொடுக்கப்பட்டுள்ள விடை வர வேண்டும்.

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | + | | - | 2 | = 4 | |
| + | | - | | x | | |
| | - | | X | | = 27 | |
| - | | x | | ÷ | | |
| | X | | ÷ | 3 | = 16 | |
| = | | = | | = | | |
| 2 | | 8 | | 6 | | |

**விடை :**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | + | 5 | - | 2 | **= 4** |
| + | | - | | **x** | |
| 7 | - | 4 | **x** | 9 | **= 27** |
| **-** | | **x** | | ÷ | |
| 6 | **x** | 8 | ÷ | 3 | **= 16** |
| = | | = | | = | |
| **2** | | **8** | | **6** | |

**ச.ஜெய பிரியா**

**இரண்டாம் ஆண்டு ஆங்கிலம் அ பிரிவு**

## பொது அறிவுத் தகவல்கள்

1. ஆந்தையால் ஒரே நேரத்தில் இரு கண்களாலும் வேறு காட்சிகளைப் பார்க்க முடியும்.
2. மனிதனுக்கு இணையான ஆற்றல் டால்பினுக்கு உண்டு.
3. நெருப்புக் கோழியால் குதிரையை விட வேகமாக ஓட முடியும்.
4. ஒட்டகச்சிவிங்கியின் நாக்கு கருநீல நிறத்தில் இருக்கும்.
5. யானையால் 3மைல் தொலைவில் இருக்கும் தண்ணீரை நுகர முடியும்.
6. ஆண் நெருப்புக் கோழியால் சிங்கத்தைப் போலக் குரல் எழுப்ப முடியும்.
7. மனித உடலில் உள்ள கல்லீரலானது 500 விதமான வேலைகளைச் செய்ய முடியும்.
8. ஒரு பட்டுப்புழுவின் கூட்டில் 32ஆயிரத்து 500 கெஜம் நூல் இருக்கும்.
9. ஒரு சிலந்தி ஒரு மணிநேரத்தில் சுமார் 450 அடி நீளம் கொண்ட வலையைப் பின்னுகிறது.
10. குழந்தை பிறக்கும்போது அதன் உடலில் 300 எலும்புகள் இருக்கும்.

**வெ.பிரியதர்ஷினி**

**இளங்கலை இரண்டாமாண்டு ஆங்கிலம் ஆ பிரிவு**

## பல கேள்வி ஒரு பதில்

1. சட்ட மேலவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் பெண்?
2. சென்னை மாநகராட்சியின் முதல் பெண் துணை மேயர்?
3. தமிழ்நாட்டின் முதல் பெண் மருத்துவர்?
4. புற்று நோய் மருத்துவமனையை (1952) நிறுவியவர்?
5. அடையாரில் ஔவை இல்லத்தை (1930) நிறுவியவர்?
6. இந்தியப் பெண்கள் சங்கத்தின் முதல் தலைவர்?
7. ஸ்திரி தருமம் என்ற மாத இதழ் ஆசிரியர்?

**விடை – டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி**

**மௌனிகா**

**இளநிலை முதலாமாண்டு**

**உயிர்தொழில்நுட்பவியல்**

## இந்தியாவின் முதன்மையானவர்கள்

1. இந்தியாவின் முதல் ஜனாதிபதி - டாக்டர் இராஜேந்திர பிரசாத்
2. இந்தியாவின் முதல் பிரதமர் - பண்டித ஜவஹர்லால் நேரு
3. இந்தியாவின் முதல் பெண் பிரதமர் - இந்திராகாந்தி
4. இந்தியாவின் முதல் பெண் ஆளுநர்- சரோஜினி நாயுடு
5. இந்தியாவின் முதல் பெண் முதல்வர் - சுசிமாகிரிபாலினி
6. இந்தியாவின் முதல் துணை பிரதமர் - ஜெகஜீவன் ராம்
7. இந்தியாவின் முதல் இராணுவத்தலைவர் - ஜெனரல் கே.எம்.கரியப்பா
8. இந்தியாவின் முதல் நோபல் பரிசு பெற்றவர் - இரவீந்திரநாத் தாகூர்
9. இந்தியாவின் முதல் செய்தித்தாள் - பெங்கால்கெசட்
10. இந்தியாவின் முதல் மகளிர் காவல் நிலையம் நிறுவப்பட்ட இடம் - கோழிகோட்

**ச.சக்திப்பிரியா**

**இளங்கலை இரண்டாமாண்டு தமிழிலக்கியம்**

## சிந்தனைத் துளிகள்

❖ கடந்த காலம் ஆராய்வதற்கு
நிகழ் காலம் முன்னேறுவதற்கு
எதிர் காலம் திட்டமிடுதலுக்கு
இவற்றை உற்று நோக்குவோமாயின்
வெற்றி நம்மை வந்து சேரும்.

❖ கடின உழைப்பு பாகற்காய் போன்று கசக்கும்
ஆனால் அதனால் கிடைக்கும் முடிவு சர்க்கரை போன்று இனிக்கும்.

❖ ஒரு தனிமையான நபருக்குச் சிறந்த நண்பன் - புத்தகம்!

- ஒவ்வொரு துளி நீரும் மதிப்புமிக்கது
  அதுபோல ஒவ்வொரு நொடியும்
  நம் வாழ்வில் விலைமதிப்பற்றது
- எதிர்காலம் நம் கையில் இல்லை, ஆனால் எதிர்காலத்திற்கான உழைப்பு நம் கைகளில் உள்ளது.
- சிரிக்கவும், மற்றவர்களைச் சிரிக்க வைக்கவும்.
  ஆனால் மற்றவர்களைப் பார்த்துச் சிரிக்க வேண்டாம்.
- உங்கள் மதிப்புமிக்க எண்ணங்களைச் செயல்கள் ஆக்குங்கள், செயல்களை வெற்றி ஆக்குங்கள்.

**தி.பிரீத்தி**

**இளநிலை இரண்டாமாண்டு கணினி அறிவியல் ஆ பிரிவு**

## முடியாது என்று முடிவடையும் சில

- யாராலும் கண்களைத் திறந்துகொண்டு தும்ம முடியாது.
- பூனையால் இனிப்புச்சுவையை உணர முடியாது.
- பறந்தாலும் நின்றாலும் அமர்ந்தாலும் தட்டான் பூச்சியினால் இறக்கையை மடக்க முடியாது.
- பன்றிகள் வானத்தை அண்ணாந்து பார்க்க முடியாது.
- கிவி பறவையால் இரண்டு அடி கூட பறக்க முடியாது.
- முதலைகளுக்கு நாக்கை வெளியே நீட்ட முடியாது.

**அ.மகாலெட்சுமி**

**இளங்கலை இரண்டாமாண்டு ஆங்கிலம் ஆ பிரிவு**

## நகைச்சுவை

1. ராஜ் : பரீட்சை ஹாலில் வந்தவுடன் ஏன்டா தும்முற!

   கணேஷ் : எனக்கு டெஸ்ட் அலர்ஜி

2. முத்து : கல்யாண மாப்பிள்ளை ஏன்டா பைனாக்குலர் வைத்திருக்கிறார்?

   சுரேஷ் : கல்யாணத்திற்கு நிறைய தூரத்துச் சொந்தங்கள் எல்லாம் வந்திருக்கிறார்களாம். அவர்களைப் பார்க்க!

3. ராமு : டேய்! வடகறி எங்கடா கிடைக்கும்?

   தருண் : வடை டீக்கடையில் கிடைக்கும். கறி பாய் கடையில் கிடைக்கும்.

**ச.பவித்ரா**

**இளங்கலை வணிகவியல் இ பிரிவு**

## ஓவியங்கள்




**சு.ச. அம்மா நவிஷிகா**

**இளங்கலை முதலாண்டு**


**சமூகவியல் துறை**



ச.பூமிகா

இளங்கலை முதலாண்டு

வணிகவியல் துறை



ம.பரிதா ப்ர்வீன்

இளநிலை இரண்டாமாண்டு


கணினி அறிவியல்




கோ. ஜெயலட்சுமி

இளநிலை இரண்டாமாண்டு

கணினி அறிவியல்



கி.கீர்த்தனா

இளநிலை முதலாண்டு


உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை




க. கலைச்செல்வி
இளங்கலை முதலாண்டு
சமூகவியல் துறை




ச. புவனேஸ்வரி
இளங்கலை இரண்டாமாண்டு பிரிவு “அ”
ஆங்கிலத்துறை




பா. சிவானி

இளநிலை முதலாண்டு

உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை




பா. சிவானி

இளநிலை முதலாண்டு

உணவு மற்றும் ஊட்டச்சத்து மேலாண்மை

## தமிழ்ப் பேரறிஞர்கள் விருது பட்டியல்

## (2021 ஆம் ஆண்டிற்கான தமிழக அரசு வெளியிட்ட விருது பட்டியல் )

| வ. எண் | விருதுகள் | அறிஞர்கள் பெயர் |
|---|---|---|
| 1 | திருவள்ளுவர் விருது | முனைவர்.வைகைச் செல்வன் |
| 2 | இளங்கோவடிகள் விருது | மா.வைத்திலிங்கன் |
| 3 | உ.வே.சா விருது | கி.இராஜநாராயணன் |
| 4 | கம்பர் விருது | மருத்துவர் எச்.வி.ஹண்டே |
| 5 | உமறுப்புலவர் விருது | ம.அ.சையத் அசன் (எ) பாரிதாசன் |
| 6 | தந்தை பெரியார் விருது | தமிழ் மகன் உசேன் |
| 7 | மகாகவி பாரதியார் விருது | கவிஞர் பூவை செங்குட்டுவன் |
| 8 | வள்ளலார் விருது | முனைவர் ஊரன் அடிகள் |
| 9 | ஜி.யு.போப் விருது | முனைவர் திருமதி உல்ரீகே நிகோலஸ் (ஜெர்மன்) |
| 10 | அண்ணல் அம்பேத்கர் விருது | வரகூர் அ. அருணாச்சலம் |
| 11 | பெருந்தலைவர் காமராஜர் விருது | முனைவர் ச.தேவராஜ் |
| 12 | பாவேந்தர் பாரதிதாசன் விருது | அறிவுமதி (எ) மதியழகன் |
| 13 | தமிழ்த்தென்றல் திரு.வி.க விருது | வி.என்.சாமி |
| 14 | முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதன் விருது | முனைவர் வீ.சேதுராமலிங்கம் |
| 15 | சொல்லின் செல்வர் விருது | நாகை முகுந்தன் |
| 16 | பேரறிஞர் அண்ணா விருது | அமரர் திரு.கடம்பூர் எம்.ஆர்.ஜனார்த்தனன் |
| 17 | கபிலர் விருது | செ.ஏழுமலை |
| 18 | சிந்தனைச் சிற்பி சிங்காரவேலர் விருது | ஆ.அழகேசன் |
| 19 | மறைமலையடிகளார் விருது | மறை.தி.தாயுமானவன் |
| 20 | காரைக்காலம்மையார் விருது | முனைவர் மோ.ஞானப்பூங்கோதை |
| 21 | தேவநேய பாவாணர் விருது | முனைவர்.கு.சிவமணி |
| 22 | வீரமாமுனிவர் விருது | முனைவர் கிரிகோரி ஜேம்ஸ்(ஹாங்காங்) |
| 23 | தமிழர் தந்தை சி.பா.ஆதித்தனார் நாளிதழ் விருது | தினமணி நாளிதழ் |
| 24 | அயோத்திதாசப் பண்டிதர் விருது | முனைவர் கோ.ப.செல்லம்மாள் |



**பெயர்: வெ.அண்ணாமலை**

ஊர் - கடலூர் மாவட்டம், திட்டக்குடி அருகே கழுதூர்

இல்லாள் - ச.புஷ்பவள்ளி

பணி - பள்ளி ஆசிரியர்

# படைப்புகள்

- **கோவேறு கழுதைகள்**
- **ஆறுமுகம்**
- **மண் பாரம்**
- **செடல்**
- **பெத்தவன்**
- **நறுமணம்**
- **செல்லாத பணம்**

**சாகித்ய அகாதமி விருது –**

**செல்லாத பணம் (2018)**